தம்பலகமம் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 !லை 06 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 நவம்பர் 13 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்பலகமம் பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்களின் கூற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 3 படி நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 144,450 கிரயமான தண்ணீர் வடிகட்டி மற்றும் ஒலிபெருக்கிகள் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 15,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ஒரு ஊழியருக்கு வழங்கப்பட்ட ரூபா 33,291 தொகையான கடன் 2012 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்பட்ட போதிலும் அதனை அவரிடமிருந்து அல்லது பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் நிலுவைக் கடனாக காட்டப்பட்டுவருகின்றது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| காணி, கட்டிடம் | 83,172,856 | நிலையான சொத்துப் பதிவேடு, மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| பொறித்தொகுதிகள் | 1,654,460 | |
| மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 17,328,050 | |
| வருமான வைப்பு | 1,276,855 | வைப்பு பதிவேடு, காலப்பகுப்பாய்வு |
| கேள்வி வைப்பு | 319,000 | |
| நானாவித வைப்பு | 717,500 | |
| ஏனைய வைப்பு | 3,863,160 | |

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவு | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனம் கண்டு அவற்றின் ஆண்டு பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதிகள் | |
| | (ண) அத்தியாயம் ஐ இன் பிரிவு 5(ஓஐஐ) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| | (ணை) அத்தியாயம் ஐஐஐ இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) மாகாண நிதி ஒழுங்கு விதி(குசு) (ண) குசு 131.3

நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் பெறுவனவுகளுக்கான பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்ட பின் பற்றுச்சீட்டுக்களின் அடியிதழ்கள் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் பாதுகாப்பாக வைக்கப்படல் வேண்டும். ஆயினும், மீளாய்வாண்டில் ரூபா 85,900 தொகையான வருமானம் பெறப்பட்டதற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களின் அடியிதழ்கள் காணாமல் போயிருந்த போதிலும் அது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஈ) IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை

கணனிகளின் உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2014 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் வருமானத்திலும் கூடிய செலவினம் ரூபா 2,557,015 ஆகும். இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்திலும் கூடிய செலவினம் ரூபா 1,747,974 ஆகும்.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டு காலப்பகுதிக்கும் முன்னைய ஆண்டிற்கும் மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 2014 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகளும் வரிகளும் | 300,000 | 42,000 | 258,000 |
| வாடகைகள் | 6,447,115 | 2,084,574 | 4,362,541 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 715,000 | 691,050 | 23,950 |
| ஏனைய வருமானம் | 395,000 | 2,270,755 | 1,875,755 |
| | 7,857,115 | 5,088,379 | 6,520,246 |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றத்திடமிருந்து 2008, 2009 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளுக்கு கிடைக்கவேண்டிய ரூபா 3,876,661 தொகையான நீதிமன்ற தண்டப்பணத்தை மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணம்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதிவரை நிறுவப்பட்டுள்ள 03 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக கட்டணங்கள் அறவிடப்படாததால் மீளாய்வாண்டில் சபை ரூபா 9,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

2.2.4 முத்திரைக் கட்டணம்

2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 819,974 தொகையினை பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

4

4.1 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புறநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் புகாரி நகர் விளையாட்டு மைதானத்தை திருத்துவதற்காக ரூபா 4,950,024 தொகைக்கு தர்ஹா HMA சனசமூக நிலையத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 3,345,139 தொகையான சிட்டைக்குரிய வேலைகள் திருப்தியாக ”ர்த்தி செய்யப்பட்டன என்று தொழில்நுட்ப உத்தியோகத்தர் சிபாரிசு செய்திருந்த போதிலும் குறித்த வேலை ஒப்பந்தகாரரால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) கீழ் காண்பிக்கப்படும் வேலைகள் செய்யப்படாமல் காணப்பட்ட போதும் இவ் வேலைகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்க முடிந்தது.

| | |
|---|---|
| சிறுவர் ”ங்கா வளாக சுற்றுமதிலுக்கான தீந்தை ”சுதல் | 39,375 |
| விளையாட்டு மைதானத்திற்கான மதில் தீந்தை ”சுதல் | 112,500 |
| விளையாட்டு மைதானத்திற்கான நீர்த் தாங்கி | 40,000 |
| | 191,875 |

4.2 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 178 மற்றும் 179 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சபையினால் கடன் பெறப்பட வேண்டுமாயின் உள்;ராட்சி அமைச்சின் முன் அனுமதி பெறப்படவேண்டுமென கூறப்பட்ட போதும் 2013 ஆம் ஆண்டில் டிப்பர் வாகனம் ரூபா 3,200,000 தொகைக்கு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது தொடர்பாக முன் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டு !ன் மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை வாசகர்களுக்கு வழங்கப்பட்ட 87 நூலகப் புத்தகங்களை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) உள்;ராட்சி கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து அலுவலக கட்டிட நிர்மாணத்திற்காக பெறப்பட்ட கடன் ரூபா 11,874,944 தொகையை கொடுத்துத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

5 மனிதவள முகாமைத்துவம்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | -- | 01 | -- |
| உதவியாளர்கள் | 18 | 14 | 04 | -- |
| சிற்றூழியர்கள் | 27 | 23 | 04 | -- |
| ஏனையவர்கள் | -- | 17 | -- | 17 |

முகாமைத்துவ சேவை அதி விசேட தரம் I இற்கான பதவி ஒன்று கடந்த ஐந்து வருட காலமாகவும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 04 பதவிகள் கடந்த மூன்று வருட காலமாகவும் சிற்றூழியர்களுக்கான 04 பதவிகள் கடந்த மூன்று வருட காலமாகவும் வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) கணக்கீடு
(ii) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(iii) இருப்புக் கட்டுப்பாடு
(iv) முற்பணங்களின் அறவீடு
(v) வரி சேகரிப்பு
(vi) பெறுகை நடைமுறை
(vii) கடன் கட்டுப்பாடு